**சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (''நிறுவகம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | SLPSAS 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதி ஒன்றில் இனங்காணப்பட்ட அனைத்து வருமானங்களும் செலவினங்களும் நிதி செயலாற்றல் கூற்றில் மிகை அல்லது பற்றாக்குறையில் உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், 2023 ஆம் ஆண்டில் நிலையான வைப்பிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,136,826 வட்டி வருமானம் வருமானமாக இனங்காணப்படாமல் கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டது. இதன் விளைவாக, மீளாய்வாண்டுக்கான மிகை நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | ஈட்டப்பட்ட வட்டியானது பொது வருமானமாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக அந்தக் கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்திற்கு நேரடியாக ஒதுக்கப்படுகிறது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | SLPSAS 07 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம், சொத்துகளாக இனங்காணப்படுவதற்கு தகுதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் கிரயத்தில் அளவிடப்பட வேண்டும். எனினும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ரூபா 20,079,896 கூட்டுமொத்தமான மூன்று நிர்மாண செயற்திட்டங்கள் ஒப்பந்ததாரர்களால் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட போதிலும் கட்டிடக் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக மூலதன நடைமுறை வேலையாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டில் இரண்டு கட்டிடங்களுக்கான ரூபா 833,388 தொகையான பெறுமானத்தேய்வு பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி இரண்டு நிர்மாணப் பணிகளும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடைமுறை வேலையாக கருதப்பட்டன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |

**1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் | 7,182,394 | 10,356,657 | 3,174,263 | இது சீர்செய்யப்படும். | வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 571 | 04 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்தான ரூபா 869,708 நிறுத்திவைத்தல் பணம் தொடர்பாக தீர்வு காண்பதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் கணக்குப் புத்தகங்களில் பிரதிபலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு மீளாய்வாண்டின் இறுதி வரை முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை முறையாக நாளதுவரையாக்குவதற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை** | | | | |
| | | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உப பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 | புதிதாக நியமிக்கப்பட்ட முப்பத்திரண்டு தற்காலிக உதவி விரிவுரையாளர்கள் மற்றும் தற்காலிக பயிற்றுவிப்பாளர்களின் வருகை மற்றும் புறப்படுதல்கள் உறுதிப்படுத்தப்படாம | தற்காலிக உதவி விரிவுரையாளர்கள்/ தற்காலிக பயிற்றுவிப்பாளர்கள் அவர்களின் வருகை மற்றும் புறப்படுதல்களை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திரத்தை | தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதங்கள் | ல் மீளாய்வாண்டில் ரூபா 7,637,405 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | பயன்படுத்துவதற்கு தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| **(இ)** | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை** | | | |
| | 2015 செப்தெம்பர் 9 ஆம் திகதிய 05/2015 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைக் கடிதம் | ரூபா 3,097,960 கூட்டுமொத்தமான முற்பணங்கள் 59 சந்தர்ப்பங்களில் 31 நாட்கள் முதல் 210 நாட்கள் வரையான காலவீச்சு தாமதங்களிற்குப் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.<br><br>பொது திறைசேரியிடம் இருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 100,000 அதிகபட்ச வரம்பை விஞ்சி 13 சந்தர்ப்பங்களில் ரூபா 3,182,590 கூட்டுமொத்தமான முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. | குறித்துரைக்கப்பட்ட நோக்கம் பூர்த்தியடைந்தவுடன் அல்லது பதினான்கு நாட்களுக்குள் முற்பணத்தை தீர்ப்பனவு செய்யுமாறு பதவியணி உறுப்பினர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.<br><br>மேலும், நி.பி. மற்றும் நிதி சுற்றறிக்கை கடிதத்தில் உள்ள தொடர்புடைய ஏற்பாடுகள் எதிர்கால கொடுக்கல்வாங்கல்களில் இணங்கும். | UGC சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 09 ஆம் திகதிய 10/2022 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை கடிதத்தின் 11(அ) பிரிவு | மீளாய்வாண்டின் போது ரூபா 28,680,184 மூலதனச் செலவினங்கள் கௌரவ நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாமலும் வரிசை அமைச்சரின் இணக்கப்பாடு இன்றியும் மேற்கொள்ளப்பட்டது. | எமது வருடாந்த பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 25 மில்லியனிற்கு வரிசை அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 41,903,265 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 7,762,169 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 49,665,434 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மூலதன மானியம் மற்றும் நன்கொடைகள் அதிகரித்தமையே மேற்குறிப்பிட்ட முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்த காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் 2030 பற்றி நிறுவகம் அறிந்திருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான மைல்கற்கள் மற்றும் நிறுவனத்திற்குப் பயன்படுத்தக்கூடிய குறிக்கோள்கள் மற்றும் அந்த இலக்குகளில் சாதனைகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான மைல்கற்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |